ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1979/44- 2016 අගෝස්තු මස 12 වැනි සිකුරාදා - 2016.08.12

1979/44 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இலக்கம்.: 6/3/7/15/07/03.

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்.: LD/05/2007/MV/118C.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

பொது மக்கள் தேவையொன்றெனக் குறிப்பிடப்படுவது மொரகஹகந்த, கலுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கான காணி எடுத்தலாகும்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், நாவுல பிரதேச அலுவலர் பிரிவிலே, கங்கலபல்லேசிய பத்துவில் மெதபிஹில்ல கிராம அலுவலர் பிரிவில், மெதபிஹில்ல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இ. பு. வ. 17 இல் குறைநிரப்பி இல. 23 பத்திர இலக்கம் 70 கொண்ட வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் .

**1. துண்டு இலக்கம்: 3126**

காணியின் பெயர்: கெந்தகொல்ல; விபரம்: பற்றைக் காடு; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0835 ஹெக்டயார்.

**2. துண்டு இலக்கம்: 3167**

காணியின் பெயர்: கெந்தகொல்ல; விபரம்: பற்றைக் காடு; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.3551 ஹெக்டயார்.

**3. துண்டு இலக்கம்: 3168**

காணியின் பெயர்: கெந்தகொல்ல; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 1.1989 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு, நாவுல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. ஆர். பி. என். பி. கருணாதிலக,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2016, ஓகத்து 05.

8 - 798

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.